முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், நாகர்கோவில்

நாள்.11.02.2026

O.S. No.71/2018

பி.வா,சா-3 ஜாண்கிறிஸ்டோபர்

வாதி தரப்பில் குறுக்கு விசாரணை.

அழகப்பபுரம் முகவரியில் நான் பிறந்தது முதலே குடியிருந்து வருகிறேன் அது எங்கள் குடும்ப வீடு. வழக்கு சொத்தின் விவரம் எனக்கு தெரியும் அதன் சர்வே எண்.961/2. என் தாத்தா அந்தோணிக்கு வழக்கு சொத்து எப்படி கிடைத்தது என்றால் தெரியாது. எனது தாத்தா அந்தோணியுடன் பிறந்தவர்கள் ராயப்பநாடார் ,மரியம்மாள் ஆவார்கள். அந்தோணி நாடாருக்கு 4 மக்கள். சூசை மரியான், இயேசு மரியாயி, மரியபுஷ்பம், அம்புறோஸ் ஆவார்கள். தாத்தா அந்தோணிக்கு அழகப்பபுரத்தில் 4 ஏக்கர் சொத்து உண்டு. என் தாத்தா உயிருடன் இருந்தபோது என் அப்பா பெரியப்பாவிற்கு பாகம் பிரித்து ஆவணங்கள் எழுதி கொடுத்தார் என்றால் வாய் மொழியாக பாகம் பிரித்து கொடுத்தார் ஆவணம் எழுதவில்லை.

அந்தோணியின் 4 மக்கள்கள் தற்போது உயிருடன் இல்லை. மரிய புஷ்பம் எந்த வருடம் காலமானார் என்றால் நியாபகமில்லை மரியபுஷ்பத்தின் மகன் ஜோசப் ஞானசேகர் என்றால் சரி. ஜோசப் ஞானசேகர் இந்த வழக்கில் எனக்கு முன் சாட்சியம் அளித்தார் என்றால் சரி. பிரதி தேவதாஸ் ,ஜோசப் ஞானசேகர் ஆகியோர் எனக்கு நெருங்கிய உறவினர்களா என்றால் ஜோசப் ஞானசேகர் நெருங்கிய உறவினர் தேவதாஸ் தூரத்து உறவினர். நீதிமன்றத்திற்கு நானும் பிரதியும் சேர்ந்து வந்தோம் என்றால் இல்லை தனிதனியாக வந்தோம் தற்போது பேசி கொண்டோம். வழக்கு நிலுவையில் உள்ள விவரம் பிரதி சொல்லி எனக்கு தெரியும் என்றால் சரி. பிரதி சொன்னதன் அடிப்படையில் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்க வந்தேன் என்றால் சரி.

அழகப்பபுரத்தில் என் அப்பா பெயரில் 3,4 ஏக்கர் உள்ளது. வழக்கு சொத்தில் என் அப்பாவிற்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல என் அப்பா பெயருக்கு பட்டா உள்ளது. என் அப்பா எங்களுக்கு பாகப்பிரிவினை செய்து ஆவணம் எழுதியபோது இந்த வழக்கு பட்டிகை சொத்தை சேர்க்கவில்லை என்றால் சரி. வழக்கு சொத்திற்கு பட்டாவில் இல்லாத நபர்களுக்கு உரிமை இல்லை என்றால் எனக்கு தெரியாது. சர்வே எண்.961/2 மாமி மரியபுஷ்பத்திற்கும் அதை தொட்டு கிழக்கு பக்கமுள்ள சொத்தை யேசுமரியாயிக்கும் வாய்மொழியாக கொடுத்து விட்டதாக என் அப்பா என்னிடம் தெரிவித்தார். மேற்படி வாய்மொழியாக கொடுத்தது எந்த தேதி எந்த மாதம் எந்த வருடம் எந்த சாட்சி முன்னிலையில் ஏற்படுத்தியது என்றால் 1970 ல் ஏற்படுத்தினார்கள் எனக்கு 2000 க்கு முன்பாக என் அப்பா எனக்கு தெரிவித்தார் யார் சாட்சி என்ற விவரம் எனக்கு தெரியாது.

உண்மையில் வழக்கு விவரம் எதுவும் தெரியாமல் பிரதிக்காக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதியின் கிரய ஆவணத்தை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்க்கவில்லை. 1970 ல் வாய்மொழியாக எனது அப்பா கொடுத்த விவரம் பிரதிக்கு தெரியுமா என்றால் தெரியும். பிரதியின் வீடு வழக்கு சொத்தின் தெற்கு பக்கம் உள்ளது. பிரதியின் வீட்டின் வடக்கு பக்கம் மரியபுஷ்பத்தின் சொத்து உள்ளது. 1ம் பிரதி வீட்டின் வடக்கு பக்கம் வாதியின் சொத்து உள்ளது என்றால் எனக்கு தெரியாது வாதியை எனக்கு தெரியாது. வாதியின் சொத்து மரியபுஷ்பத்தின் சொத்தின் கிழக்கு பக்கம் உள்ளது. வாதி சொத்திற்கு வடக்கு பக்கம் ரோடு உள்ளது என்றால் சரி. வாதி சொத்தின் தெற்கு பக்கம் பிரதி தேவதாஸ் சொத்து உள்ளது என்றால் சரி. பிரதி சொத்திற்கு 4 பக்கமும் காம்பவுண்ட் சுவர் கேட் உள்ளது என்றால் சரி.

961/2 ல் உள்ள சொத்தில் என் அப்பா பெயருக்கோ அப்பாவின் சகோதரிகளுக்கோ தாத்தாவிற்கோ ஆவணம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல பட்டா உள்ளது. பட்டா படி நிலவரி செலுத்தியுள்ளோமா என்றால் இல்லை. ஜோசப் ஞானசேகர் 963 ல் அவரது அம்மாவிற்கு அனுபவம் இருப்பதாக சாட்சியம் அளித்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது, என் குடும்ப வகை யாருக்குமே 961/2 ல் எந்தவித உரிமையோ அவகாசமோ எந்த காலத்திலும் இல்லை என்றால் சரியல்ல. பிரதியின் விலைபத்திரத்தில் சொத்திற்கு வடக்கு பக்கம் ராயப்பன் சொத்து என காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பிரதி வாதியின் சொத்தை பலவந்தமாக பாதையாக பயன்படுத்தி வருகிறார் என்றால் சரியல்ல.